தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 2.5 கோடி டன் உணவுப் பொருள் உற்பத்தி இலக்கு



**சென்னை,**

வேளாண்மைக் கருத்தரங்க தொடக்க விழாவில் பங்கேற்ற மத்திய திட்டக்குழு உறுப்பினர் கே.கஸ்தூரிரங்கன் (இடது), எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையத்தின் நிறுவனர் எம்.எஸ்.சுவாமிநாதன்.

12-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2.5 கோடி டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று மத்திய திட்டக்குழு உறுப்பினர் கே.கஸ்தூரிரங்கன் தெரிவித்தார்.

வேளாண் அறிவியலாளர் "நார்மன் போர்லாக்' நூற்றாண்டு விழாவையொட்டி, வேளாண்மை குறித்த கருத்தரங்கம் தொடக்க விழா சென்னை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் கஸ்தூரிரங்கன் பேசியதாவது: கடந்த 60 ஆண்டுகளில் இந்தியாவின் வேளாண்மை வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவில் பல கோடி பேருக்கு உணவு அளிப்பது தவிர, தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருள்களையும் வேளாண்மை வழங்குகிறது.

11-வது ஐந்தாண்டு திட்டத்தில் பாசன வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் முதலீடு செய்வது மற்றும் தொழில்நுட்பங்களுக்கு இடையேயான இடைவெளி குறைக்கப்பட்டுள்ளது. காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தி செய்வதும் உயர்த்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வருவாயும் அதிகரித்துள்ளது.

தனி மனிதரின் வேளாண் பொருள்கள் நுகர்வு உயர்ந்துள்ளது. வேளாண் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்து அறிவுறுத்தப்படுகிறது.

12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2.5 கோடி (25 மில்லியன்) டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், 1 கோடி டன் அரிசி, 80 லட்சம் டன் கோதுமை, 40 லட்சம் டன் பருப்பு வகைகள், 30 லட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, காய்கனி உற்பத்தியில் 7.2 சதவீத வளர்ச்சியை எட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேளாண் பல்கலைக்கழகங்கள், விவசாயிகள், சுய உதவிக்குழுக்கள் ஆகியோரிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கு உதவும் வகையில் 11-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் மொத்தம் 630 கிரிஷ் வித்யான் கேந்திரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றார் கஸ்தூரிரங்கன்.

நிகழ்ச்சியில், ஆராய்ச்சி நிலையத்தின் நிறுவனர் எம்.எஸ்.சுவாமிநாதன் பேசுகையில், "விவசாயத்துக்கு எது நல்லது என்பது விவசாயிகளுக்குத் தெரியும். அவர்களின் கருத்துகளையும் கேட்க வேண்டும். அவர்களுக்கு மரியாதை தரவேண்டும்' என்றார்.

ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் மதுரா சுவாமிநாதன், செயல் இயக்குநர் அஜய் பரிடா, இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் இயக்குநர் ஜெனரல் எஸ்.ஐயப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கம் 15-ஆம் தேதி நிறைவடைகிறது.

**காரைக்காலில் விரைவில் நவீன ரேடார் கருவி: எஸ். ஆர். ரமணன் பேச்சு**

**தஞ்சாவூர்,**



விழாவில் கருத்தரங்க மலரை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. திருமலை வெளியிட, அதைப் பெற்றுக் கொள்கிறார் சென்னை மண்டல வானிலை ஆய்வு மையத்தின் புயல் எச்சரிக்கை மைய இயக்குநர் எஸ்.ஆர். ரமணன்.

காரைக்காலில் வானிலை ஆய்வுக்காக விரைவில் நவீன ரேடார் கருவி அமைக்கப்படவுள்ளது என சென்னை மண்டல வானிலை ஆய்வு மையத்தின் புயல் எச்சரிக்கை மைய இயக்குநர் எஸ்.ஆர். ரமணன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொழில், நில அறிவியல் துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற ""கோஸ்டல்டெக் 2014" என்கிற இடம்சார் தொழில்நுட்பம் மூலமாக கடல் சார்ந்த வளங்கள், மேலாண்மை உத்திகள் குறித்த இரு நாள் தேசியக் கருத்தரங்கத்தின் தொடக்க விழாவில் அவர் மேலும் பேசியது:

உலக அளவில் 5 சதப் புயல் வங்காள விரிகுடாவிலும், ஒரு சதம் அரபிக் கடலிலும் உருவாகிறது.

இந்தியா, இலங்கை, வங்கதேசம், மியான்மர், பாகிஸ்தான், மாலத்தீவு, ஓமன், தாய்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்படும் புயல் சின்னம் குறித்து தில்லியில் உள்ள மண்டல சிறப்பு வானிலை ஆய்வு மையத்திலிருந்து தகவல் அளிக்கப்படுகிறது. இந்த மையத்தில் சக்தி வாய்ந்த அமெரிக்க செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்க முடிவதால், கடல் அலைகளை வைத்து புயல் வருவது கணிக்கப்படுகிறது.

புயல் வருவதை முன்னதாக அறிவதில் ரேடார் கருவி முக்கியப் பங்கு வகிக்கிறது. வங்கக் கடலில் உருவாகும் புயல் சின்னத்தைக் கண்டறிய சென்னை,

மசூலிப்பட்டினத்தில் நவீன ரேடார் கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதுபோல, காரைக்காலிலும் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

கடந்த காலத்தில் புயல் எந்தப் பாதையில் சென்றதோ, அதைக் கணக்கில் கொண்டு புயல் கரையைக் கடக்கும் பாதை கணக்கிடப்படுகிறது. மேல் திசையில் என்ன காற்று வீசுகிறதோ, அதைக் கணக்கில் கொண்டு எதிர்காலத்தில் எந்த அளவுக்குப் புயல் காற்று வீசும் என்பது கணிக்கப்படுகிறது. புயல் நகரும்போது நேர் கோட்டில் சென்றால், அது எந்தத் திசையில் செல்கிறது என்பதைக் கணிப்பது எளிது. அதுவே, வளைந்து, வளைந்து சென்றால் எந்தத் திசையில் செல்கிறது என்பதைக் கணிப்பது கடினம். அதற்கும் இப்போது நவீன கருவிகள் வந்துள்ளதால், கணினி மூலம் கணித்துவிடமுடிகிறது என்றார் ரமணன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. திருமலை தலைமை வகித்தார். பொதுப் பணித் துறை நிலத்தடி நீர் பிரிவின் ஓய்வு பெற்ற இணை இயக்குநர் கே. சந்தானம், பல்கலைக்கழகப் பதிவாளர் சே. கணேஷ்ராம், அறிவியல் புலத் தலைவர் எம். ஜகதீசன் உள்ளிட்டோர் பேசினர்.

முன்னதாக, தொழில், நில அறிவியல் துறைத் தலைவர் இரா. பாஸ்கரன் வரவேற்றார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் க. சங்கர் நன்றி கூறினார்.

**அடுத்த புயல் - ப்ரியா**

தில்லியில் உள்ள மண்டல சிறப்பு வானிலை ஆய்வு மையத்துக்கு உள்பட்ட 8 உறுப்பு நாடுகள் இணைந்து புயல் சின்னத்துக்கான பெயர்களைச் சூட்டுகின்றன. இந்த 8 நாடுகள் சேர்ந்து 64 பெயர்களை உருவாக்கியுள்ளன. இதில், இந்தியா தரப்பில் அக்னி, ஆகாஷ், லெகர் போன்ற பெயர்கள் சூட்டப்பட்டன. வங்கதேசம் தரப்பில் நிஷா, ஹெலன் போன்ற பெயர்கள் வைக்கப்பட்டன. அடுத்த புயலுக்கு ப்ரியா என்ற பெயரை இலங்கை சூட்டியுள்ளது என்றார் ரமணன்.

தில்லியில் உள்ள மண்டல சிறப்பு வானிலை ஆய்வு மையத்துக்கு உள்பட்ட 8 உறுப்பு நாடுகள் இணைந்து புயல் சின்னத்துக்கான பெயர்களைச் சூட்டுகின்றன. இந்த 8 நாடுகள் சேர்ந்து 64 பெயர்களை உருவாக்கியுள்ளன. இதில், இந்தியா தரப்பில் அக்னி, ஆகாஷ், லெகர் போன்ற பெயர்கள் சூட்டப்பட்டன. வங்கதேசம் தரப்பில் நிஷா, ஹெலன் போன்ற பெயர்கள் வைக்கப்பட்டன. அடுத்த புயலுக்கு ப்ரியா என்ற பெயரை இலங்கை சூட்டியுள்ளது என்றார் ரமணன்.

**விவசாயிளுக்கு இணையதள பயிற்சி**

**காரியாபட்டி,**

விருதுநர் மாவட்டம் கோவிலாங்குளத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் விவசாயிளுக்கு இணையதள அறிமுப்பயிற்சி வழங்ப்பட் டது. கோவிலாங்குளத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் மையத்தில் 35 விவசா யிளுக்கும், 30 உதவி வேளாண்மை விரிவாக்க அலுவலர்ளுக்கும் 2 நாள் பயிற்சி நடைபெற்றது. அனைவரையும் ராமகிருஷ்ணன் வரவேற்றார். வேளாண் அறிவி யல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி துவக்கி வைத்து, பல் வேறு இணைய தளங்ளின் பயன்பாடு பற்றிய செய்திளை விவசாயிளுக்கும், அலுவ லர்ளுக்கும் எடுத்துக் கூறினார். பயிற்சியில் தகவல் தொழில்நுட்ப உத்திளையும், டெமிக் மற்றும் டிஎம்ஐஇ. வேளாண்மை, விவசாய பொருள்ளின் தினசரி சந்தை நிலவர விவரங்ளை பற்றியும் ராமகிருஷ்ணன் விளக்கினார்.

இப்பயிற்சியில் பயிர்ளில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல், இ-இணையதள வேளாண்மை, வெற்றி விவசாயிள், மண் சம்பந்தமான தொழில் நுட்ப ஏடுள் (டெசி பர்), வேளாண்மையில் தொழில் நுட்ப உத்திள், புதிய பயிர் ரகங்ள், உணவு பொருள்ளை மதிப்பூட்டுதல் போன்ற தலைப்புளில் வேளாண் அறிவியல் மையத் தைச் சேர்ந்த ராஜேந்திரன், ஜெகதீஸ்வரி, முத்துராமு, தீபாரன், வீரணன் அருண்கி ரிதாரி, பண்ணை மேலாளர் கார்த்திக், திட்ட உதவியாளர்ள் கவிதா, ரம்யா ஆகி யோர் விளக்கினர். பின்பு பயனாளிளுக்கு இணையங்ளை எவ்வாறு பயன்படுத்து வது என பயிற்சி அளிக்கப்பட்டது. உதவிப் பேராசிரியர் ராமகிருஷ்ணன் நன்றி கூறி னார்.

**நாமக்கல்லில் ரூ. 50 லட்சம் பருத்தி ஏலம்**

**நாமக்கல்,**

அறுவடை குறைந்ததால் ஏலத்துக்கு பருத்தி வரத்து சரிவடைந்தது. இதனால், நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் சுமார் 3,300 மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு விற்பனையாகின. நாமக்கல் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகின்றன. இதன்படி, இந்த வாரம் வியாழக்கிழமை

(மார்ச்13) நடைபெற்ற ஏலத்துக்கு 3,300 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. அவற்றில் டிசிஹெச் முதல் ரகம் குவிண்டால் ரூ.4,601 முதல் ரூ.6,095 வரையும், இரண்டாம் ரகம் குவிண்டால் ரூ.4,261 முதல் ரூ.4,690 வரையும், ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4,771 முதல் ரூ.5,019 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,319 முதல் ரூ.5,459 வரையும் ஏலம் போனது. இதன்படி, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.50 லட்சத்துக்கு விற்பனையாகியதாகக் கூட்டுறவு அலுவலர்கள் தெரிவித்தனர். கடந்த 2 மாதங்களாக அறுவடை சீசன் என்பதால் பருத்தி வரத்து வாரம் 7,000 மூட்டைகள் வரை வரப்பெற்றன. தற்போது சீசன் முடிந்து அறுவடை குறைந்ததால் ஏலத்துக்கு பருத்தி வரத்தும் குறைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## கெடுபிடியைத் தளர்த்த தேர்தல் ஆணையத்துக்கு கோழிப் பண்ணையாளர்கள் கோரிக்கை

**நாமக்கல்,**

உரிய ஆவணங்களின்றி பணம் கொண்டு வரும் முட்டை லாரிகளை வாகனச் சோதனையில் பிடிப்பதால், முட்டை வர்த்தகம் பாதிக்கப்படுவதைந்க் கருத்தில் கொண்டு கெடுபிடியைத் தளர்த்த தேர்தல் ஆணையத்துக்கு, தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மக்களவைத் தேர்தல் நன்னடத்தை விதிகளை அமலாக்கும் விதமாக, மாநிலம் முழுவதும் தீவிர வாகனச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இதில், ஆவணங்களின்றி ரூ.50,000-க்கும் அதிகமாகக் கொண்டு வரப்படும் பணம், பொருள்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. கடந்த சில நாள்களாக மாநிலத்தின் பல பகுதிகளில் முட்டைகளை இறக்கிவிட்டு வரும் லாரிகளைப் பிடித்து உரிய ஆவணங்களின்றி கொண்டு வரும் வசூல் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, நாமக்கல் அருகே மெட்டாலா பகுதியில் புதன்கிழமை சோதனையில் இரு முட்டை லாரிகளில் கொண்டு வரப்பட்ட ரூ.7.45 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. தொடரும், இந்த நடவடிக்கையால் முட்டை வர்த்தகம் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதாக கோழிப் பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர் ஆர்.நல்லதம்பி, தமிழக தலைமைத் தேர்தல் ஆணையருக்கு அனுப்பிய மனுவில்

கூறியது:

நாமக்கல் மண்டலத்திலிருந்து நாள்தோறும் 3.20 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்காக தமிழகம், கேரள மாநிலங்கள் முழுவதும் அனுப்பப்படுகின்றன. இந்தத் தொழிலை நம்பி நேரடியாகவும், மறைமுகமாகவும் பல லட்சம் மக்கள் பயன்பெறுகின்றனர்.

வியாபாரத்துக்காக முட்டைகளைப் பண்ணையாளர்கள் தங்கள் சொந்த லாரிகளில் விற்பனைக்கு எடுத்துச் செல்கின்றனர். நடைமுறைக் காரணங்களால் சில முட்டை வாகனங்களில் முட்டைப் பணம், கோழி விற்ற பணம் எடுத்து வர வேண்டிய சூழல் உள்ளது. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

எனவே, கோழிப் பண்ணைத் தொழிலை தொடர்ந்து நடத்திட முட்டை வாகனங்களில் பணத்துக்கான முட்டை விற்பனை ரசீது புத்தகம், கோழி விற்பனை ரசீது புத்தகம் போன்ற ஆதாரங்கள் இருந்தால், எந்தவித இடையூறும் அளிக்காமல் வாகனங்களை விடுவிக்க துறை அலுவலர்களுக்கு உத்தரவிட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் குமரியில் தள்ளாடும் வள்ளம் மீனவர்கள்!

**கன்னியாகுமரி,**

கடலில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால் அண்மைக் காலமாக போதிய மீன்கள் கிடைக்காமல் தொழில் நஷ்டம் ஏற்பட்டு வருவதாக கன்னியாகுமரி சுற்று வட்டார பகுதிகளில் வள்ளங்களைக் கொண்டு மீன்பிடிக்கும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

ஏற்கெனவே சின்னமுட்டம் துறைமுகத்தில் விசைப்படகுகளில் மீன்பிடித்து வரும் மீனவர்கள் தொழில் நஷ்டம் என முடங்கியிருக்கும் நிலையில் வள்ளம் மீனவர்களும் தொழில் பாதிப்படைந்து வருவதாகக் கூறியுள்ளது ஒட்டுமொத்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாகியுள்ளது.

கன்னியாகுமரி சுற்று வட்டாரப் பகுதிகளான ஆரோக்கியபுரம், சின்னமுட்டம், பெரியநாயகி தெரு, சகாயமாதா தெரு, அந்தோனியார் தெரு, வாவத்துறை, புதுக்கிராமம், கோவளம், கீழ மணக்குடி, மேல மணக்குடி ஆகிய பகுதிகளில் 5000-த்துக்கும் அதிகமான வள்ளங்களில் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

கடந்த 2004 சுனாமிக்குப் பின்னர் கடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதன்காரணமாக தொழில் ரீதியாக தாங்கள் கடும் நஷ்டத்தைச் சந்தித்து வருவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். இது குறித்து பெரியநாயகிதெரு பகுதியைச் சேர்ந்த மீனவர் எஸ்.ஜோசப் ஐரின் (40) கூறியதாவது:

அதிகாலை 2 மணிக்கு வள்ளங்கள் மூலம் கடலுக்குள் சென்று மீன்பிடித்து விட்டு காலை 6 மணிக்கு கரை திரும்புகிறோம். 25 முதல் 40 நாட்டிக்கல் தொலைவு வரை சென்று தூண்டில்கள் மூலம் மீன்பிடித்து வருகிறோம்.

சுனாமி ஏற்படுவதற்கு முன்னர் ஆழ்கடலுக்குள் நாங்கள் மீன்பிடிக்கும் பகுதியில் தண்ணீர் கண்ணாடி போன்று தெளிவாக இருக்கும். மீன்கள் கூட்டமாக வந்து செல்வதைப் பார்த்து தூண்டில் போடுவதால் அதிகமான மீன்கள் கிடைத்து வந்தன. தற்போது கச்சான் காற்று அதிகமாக வீசி வருவதால் அங்கு கீழ் கடல் உருட்டு ஏற்படுகிறது. இதனால் கடல்நீர் கலங்கி எந்தப் பகுதியில் மீன்கள் வருகின்றன என்பதை தெரிந்து கொள்ள இயலாத சூழ்நிலை கடந்த 9 ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

பொதுவாக இதுபோன்ற நிகழ்வுகள் கடலுக்குள் ஏற்படுவதை நாங்கள் பார்த்ததே இல்லை. இந்த மாற்றத்தின் காரணமாக மீன்கள் கிடைப்பது மிகவும் அரிதாகி தொழில் நஷ்டம் ஏற்படுகிறது. இது தவிர மீன்களை பிடித்துக் கொண்டு கரைக்கு திரும்பும் போது அலைகளின் வேகத்தில் வள்ளம் தடுமாற்றம் அடைந்து பாறைகளில் மோதுவதால் வள்ளம் சேதமடைகிறது.

எனவே பெரியநாயகி தெரு பகுதியில் தூண்டில் வளைவு பாலம் அமைக்க கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகிறோம். அரசு எங்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றார் அவர்.

அதே பகுதியைச் சேர்ந்த மீனவர் மரியதாசன் கூறியதாவது:

தற்போது மளுவை, கிளாத்தி ஆகிய மீன்களின் சீசன் என்பதால் ஆழ்கடல் பகுதிக்குச் செல்கிறோம். அண்மைக் காலமாக கடலில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக வெறும் கையுடன் திரும்பும் நிலை உள்ளது. வள்ளம் ஒன்றில் 5 அல்லது 7 பேர் வரை தொழிலுக்குச் செல்கிறோம். சாதாரணமாக வள்ளம் ஒன்றுக்கு டீசல், ஐஸ் கட்டிகள் என ரூ. 1500 வரை செலவு பிடிக்கும். கிடைக்கும்

மீன்களில் செலவு தொகை போக மீதமுள்ள பணம் சமமாகப் பங்கு வைத்து தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

தொழில் நன்றாக இருந்தால் மீனவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். உயிரைப் பணயம் வைத்து தொழில் செய்து பலன் கிடைக்காமல் இருப்பது வேதனையாக உள்ளது என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மதுரை விவசாயிகளுக்கு கைகொடுக்கிறது குதிரைவாலி : மழையையும் தாங்கும் வறட்சியைத் தாங்கும்**




**மதுரை :** கோவை வேளாண் பல்கலை அறிவியல் மையம் கண்டுபிடித்துள்ள, குறுந்தானிய குதிரைவாலி கோ (கேவி2) ரகம், மதுரை மாவட்டத்திற்கு, ஏற்றதென, நிரூபிக்கப்பட்டுள்ளது.

மதுரை விவசாயக் கல்லூரியின் வேளாண் அறிவியல் மையம் சார்பில், 2011 முதல், மூன்றாண்டுகளாக விவசாயிகளின் நிலத்தில், பயிரிடப்பட்டு, அதிகபட்ச விளைச்சல் இலக்கை எட்டியுள்ளது. இதுகுறித்து, மைய உதவி பேராசிரியர் செல்வி கூறியதாவது:திருமங்கலம், சேடபட்டி, கள்ளிப்பட்டி, கள்ளிக்குடி, உசிலம்பட்டி ஒன்றியங்கள் மழையை நம்பி பயிர் செய்யப்படுகின்றன. இங்கு

மானாவாரியில் விவசாயிகள் குறுந்தானியங்களை பயிரிட்டாலும், எக்டேருக்கு ஒன்றே கால் டன் அளவில் தான் விளைச்சல் பெறுகின்றனர். உற்பத்தி செலவுடன் ஒப்பிடும் போது, லாபம் குறைவு தான்.எங்களது ரகத்தை எக்டேருக்கு பத்து கிலோ விதைகளை சாகுபடி செய்தால், 95 நாட்களில் இரண்டரை டன் விளைச்சல் கிடைக்கும். வறட்சியைத் தாங்கும், மழைபெய்தாலும் பயிர் சாய்ந்து விடாமல் நிற்கும்.2011 முதல் 2012ல் கள்ளிக்குடியில் சிவரக்கோட்டை, 2013ல் சேடபட்டியில் கே.ஆண்டிபட்டி, 2014ல் உசிலம்பட்டியில் ரங்கசாமிபட்டி கிராமங்களில் தலா பத்து விவசாயிகளைத் தேர்ந்தெடுத்தோம். ஒரு ஏக்கர் பரப்பளவில், அரை ஏக்கர் விவசாயிகள் விரும்பும் ரகத்தை பயிரிடுவது, அரை ஏக்கரில் எங்களது ரகத்தை பயிரிடுவதென பிரித்து செயல்படுத்தினோம். அரை ஏக்கருக்குரிய அதிக விளைச்சல் கிடைத்ததால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் 300 விவசாயிகள் வரை, இந்த ரகத்தை பயிரிடுகின்றனர்.தானியமாக விற்பதைக் காட்டிலும், விதையாக விற்பனை செய்தால், நல்ல லாபம் கிடைக்கும். விதை நீக்கிய தக்கையை, கால்நடை தீவனமாக தரலாம். விதைச் சான்று பெறுவதற்கு, வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் மூலம், வழிகாட்டுகிறோம். எங்களிடமும் குறைந்த அளவில், விதைகள் விற்பனைக்கு உள்ளன. புரட்டாசி பட்டமும், அடுத்து வரக்கூடிய ஆடி பட்டமும் ஏற்றது. கிணற்று பாசனம் மூலம் விளைச்சல் பெறலாம், என்றார். விதைகள் தேவைக்கு:94431 85237

**வானிலை மைய அதிகாரி தகவல் புயல் சின்னத்தை அறிய காரைக்காலில் விரைவில் நவீன கருவி அமைப்பு ஏல மார்க்கெட்டில் மல்லிகை வரத்து அதிகரிப்பு: விலை பாதியாக குறைப்பு**

**ப.வேலூர்**: மல்லிகை வரத்து அதிகரிப்பால், அதன் விலை பாதியாக குறைந்துள்ளது. மற்ற பூக்கள் வரத்து குறைவால், விலையும் அதிகரித்தது. இந்த விலை உயர்வு மற்றும் சரிவு, சம்பந்தப்பட்ட விவசாயிகளை மகிழ்ச்சியும், கவலையையும் அடையச் செய்துள்ளது. ப.வேலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களான, பரமத்தி, கபிலர்மலை, ஜேடர்பாளையம், கரூர் மாவட்டம்

சேமங்கி, வேலாயுதம்பாளையம் ஆகிய பகுதிகளில், சம்பங்கி, அரளிபூ, மல்லிகை, கோழிக்கொண்டை பூ ஆகிய பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது.அறுவடை செய்யப்பட்ட பூக்கள், ப.வேலூரில் செயல்படும் தினசரி மார்க்கெட்டில் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு கொண்டு வந்த பூக்களை, சுற்று வட்டாரத்தை சேர்ந்த வியாபாரிகள், உள்ளூர் தேவைக்காக போட்டி போட்டு ஏலம் எடுத்துச் செல்கின்றனர்.

திருவிழா, திருமணம் போன்ற விசேஷ காலங்களில், பூக்களின் விலை தாறுமாறாக உயர்வதும், மற்ற காலங்களில், அதள பாதாளத்துக்கு செல்வதும் வாடிக்கை. இந்நிலையில், நேற்று ஏல மார்க்கெட்டில், பல்வேறு பகுதிகளில் இருந்து அறுவடை செய்யப்பட்ட பூக்கள், ஏலம் விடப்பட்டது.தண்ணீர் பற்றாக்குறை காரணமாக சாகுபடி குறைந்ததால், சம்பங்கி, அரளி பூ ஆகியவை வரத்து குறைவாக இருந்தது. அதனால், அப்பூக்கள், விலை உயர்ந்தது. அதன்படி, கடந்த வாரம், கிலோ, 150க்கு ஏலம் போன சம்பங்கி, நேற்று, 220 ரூபாய்க்கும், 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட அரளி பூ ஒரு கிலோ, 110 ரூபாய்க்கும் விலை போனது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.அதேபோல், மல்லிகை சீஸன் தற்போது துவங்கியுள்ளது. அதனால், அதன் வரத்தும் அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்ததால், அதன் விலையில் சரிவு ஏற்பட்டது. கடந்த வாரம் கிலோ, 300க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிகை, நேற்று, பாதியாக குறைந்த, 150 ரூபாய்க்கு விலைபோனது. இந்த விலை சரிவு, மல்லிகை சாகுபடியாளர்களை கவலை அடையச் செய்துள்ளது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம் உதவி இயக்குனர் ஆய்வு

**உளுந்தூர்பேட்டை**:உளுந்தூர்பேட்டை அருகே கோமாரி நோய் தடுப்பூசி முகாம் பணிகளை தமிழக கால்நடைத் துறை உதவி இயக்குனர் நேரில் ஆய்வு செய்தார்.மாடுகளை தாக்கும் கோமாரி நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கோமாரிநோய் தடுப்பூசி சிறப்பு முகாம் தமிழகம் முழுவதும் 1ம் தேதி முதல் வரும் 21ம் தேதி வரை நடக்கிறது. உளுந்தூர்பேட்டை தாலுகா பாதூரில் முகாம் நடந்து வருகிறது.இந்த முகாம் பணிகளை தமிழக கால்நடைத்துறை உதவி இயக்குனர் சுரேஷ் நேற்று ஆய்வு செய்தார். மாவட்ட நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் மகேந்திரன், திருக்கோவிலூர் கோட்ட உதவி இயக்குனர் குபேந்திரன்,

உதவி மருத்துவர்கள் வினோத், கால்நடை பயிற்சி மருத்துவர்கள் பர்தவுஸ், சங்குதா, ரம்யா, கால்நடை ஆய்வாளர்கள் ராஜாகோபால், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் ராஜா, மகேஸ்வரி உடனிருந்தனர். சின்னக்குப்பத்தில் 396, பெரியகுப்பத்தில் 249 கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக கால்நடை மருத்துவர் தெரிவித்தார்.

## மாங்காய் விளைச்சல் அமோகம்

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் பூத்துகுலுங்கும் மாமரங்களில் மாங்காய் பிஞ்சு அதிகளவில் காணப்படுகிறது.முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் அனைவரும் விரும்பி சாப்பிடும் பழங்களில் ஒன்றாகும். சங்கராபுரம் பகுதியில் மா மரங்களில் பூக்கள் பூத்து மாங்காய் பிஞ்சு அதிகளவில் காணப்படுகிறது. இந்த சிறு, மாங்காய் பிஞ்சுகள் நாளடைவில் வளர்ந்து சித்திரை, வைகாசி மாதங்களில் தொடங்கும் மாம்பழ சீசனில் விற்கப்படும் . சங்கராபுரம் பகுதியில் உள்ள மாமரங்களில் கொத்து கொத்ததாய் சிறிய அள வில் மாங்காய் காய்த்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தோட்டக்கலை பயிர்களில் விவசாயிகள் ஆர்வம்

**மரக்காணம்**: கோடைக்காலத்தில் தோட்டக்கலை பயிரில் குறைந்த நீரை பயன்படுத்தி குழி வகை பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மரக்காணம் ஒன்றியத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் நெல், கரும்பு, கேழ்வரகு, நிலக்கடலை போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டன. தற்போது பருவ மழை பொய்த்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.இரண்டு போகம் பயிர் செய்த இடங்களில் ஒரு போகம் மட்டுமே பயிர் செய்கின்றனர். நிலத் தடி நீர் வேகமாக குறைந்து விட்டதால் தோட்டக்கலை பயிர்களான வெள்ளரி, வெண்டை போன்றவற்றை ஏரிமேடு, நல்லம்பாக்கம். நடுக்குப்பம், கீழ்பேட்டை கிராமங்களில் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

## தர்பூசணி வரத்து அதிகரிப்பு விலை குறைவால் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரியில், தர்பூசணி வரத்து அதிகரித்து உள்ளதால், விலை குறைந்து வருவதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் தர்பூசணிகளை வாங்கி செல்கின்றனர். கால நிலைகளுக்கு ஏற்ப, பொதுமக்களுக்கு இயற்கை பல வகையான பழங்கள் மற்றும் காய்களை வழங்கி உள்ளது. குறிப்பாக, கோடை காலத்தில் ஏற்படும் வெயில் தாக்கத்தில் இருந்து தப்பிக்க இயற்கை தர்பூசணி, நுங்கு, வெள்ளரிக்காய் ஆகியவற்றை நமக்காக வழங்கி உள்ளது.

தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டிவனம், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் கோடை காலத்தை முன்னிட்டு, அதிகளவு தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு வழக்கத்தை கோடை துவங்கும் முன்பே தர்பூசணி வரத்து துவங்கியது. மேலும், சீஸன் துவக்கத்தில், ஒரு கிலோ தர்பூசணி, 18 ரூபாய் முதல் விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில தினங்களாக, தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் இருந்து தர்மபுரி சந்தை பேட்டைக்கு, அதிகளவில் விற்பனைக்கு தர்பூசணி வரத்து அதிகரித்து உள்ளது. தற்போது, தர்பூசணி விலை ஒரு கிலோ, 10 ரூபாயாக குறைந்துள்ளது. இதனால், பொதுமக்கள் தர்பூசணிகளை ஆர்வத்துடன் வாங்கி, செல்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ஏறும் வெயில்: எகிறும் காய்கறி விலை

**பொள்ளாச்சி** : அதிகரித்து வரும் கோடை வெயில், பொதுமக்களின் அன்றாட வாழ்வை பாதிக்கும் காய்கறி விலையில் பல மாற்றங்களை உண்டாக்கி வருகிறது. கடந்த மாதம் வரை பனிப்பொழிவு காரணமாக, சில காய் வகைகள் வரத்து குறைந்து விலை அதிகரித்து இருந்தது; சில வகைகள் விலை குறைந்து காணப்பட்டன. ஆனால் தற்போது பனிக்காலம் முடிந்து வெயில் அதிகரிக்க துவங்கியுள்ளதை அடுத்து, காய்கறி விளைச்சலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது விலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரை, ஒரு கிலோ முருங்கைக்காய் 100 ரூபாயை தாண்டி விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் நடுத்தர வர்க்கத்தினர் 'முருங்கைக்காய் கசக்கும்' என்ற மனநிலையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் கடந்த சில நாட்களாக, முருங்கையின் விலையில் கடும் சரிவு ஏற்பட்டு,

கிலோ ரூ.3 முதல் 5 வரை சந்தையில் விற்பனையாகிறது. சில மாதங்களுக்கு முன்பு 8 ரூபாய்க்கு விற்பனையான பெரிய சைஸ் தேங்காயின் விலை, தற்போது 20 - 23 ரூபாயை தாண்டி விட்டது. அதே போல ரூ.10லிருந்து 12 வரை விற்பனையான ஒரு கிலோ கருவேப்பிலை கட்டு, தற்போது 50 ரூபாய்க்கு விற்பனையாகிறது. பொள்ளாச்சி திரு வி.க., காய்கறி மார்க்கெட் வியாபாரி சாந்து முகமது கூறியதாவது:

வெயில் காலத்தில் முருங்கை மரங்கள் அதிகம் காய்க்கும். ஒரு மரத்திற்கு 100 காய்களுக்கு மேல் உற்பத்தியாகும். இதனால் தற்போது முருங்கை வரத்து அதிகரித்து விலை மிகவும் குறைந்துள்ளது. மழை பெய்தால் உற்பத்தி மிகவும் குறைந்து விலை திரும்பவும் அதிகரிக்கும்.

தேங்காயை பொறுத்த வரை அது அதிகம் விளையும் பொள்ளாச்சி பகுதியிலேயே வறட்சியின் காரணமாக பல ஏக்கர் தென்னைகள் காய்ந்து போனதால் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. அதனால் இப்போதைக்கு விலை குறைய வாய்ப்பு இல்லை.

கருவேப்பிலை உற்பத்தி உள்ளூரில் மிகவும் குறைந்து விட்டது. அதனால் காரமடை, மேட்டுப்பாளையம் பகுதிகளில் இருந்து தான் குறைந்த அளவு வரத்து உள்ளது. ஆகவே விலை அதிகரித்து காணப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## பூக்கள் விலையில் மாற்றம் பருவநிலை மாறுதல் எதிரொலி

**பொள்ளாச்சி** : பருவநிலை மாற்றங்களைத்தொடர்ந்து பூ விலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பனிப்பொழிவு நின்று, தற்போது கோடை வெயில் ஆரம்பித்துள்ளதால், பூக்களின் வரவில் மாற்றம் ஏற்ப்பட்டுள்ளது. இது பூக்களின் விை◌லயிலும் மாற்றத்தை தந்துள்ளது.

கடந்த சில மாதங்களாக கடும் பனிப்பொழிவு இருந்து வந்த நிலையில், மல்லிகை உள்ளிட்ட பூக்கள் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டது. அதனால் வரத்து குறைந்து மல்லிகை அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்தது. செண்டுமல்லி, பட்டுப்பூ, செவ்வந்தி போன்ற பூக்கள் அவ்வளவாக வரவேற்பு இல்லாத நிலையில் அளவான விலைக்கு விற்பனையாயின. ஆனால் தற்போது மல்லிகைப்பூ வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. தற்போது பொள்ளாச்சி பூ மார்க்கெட்டில், ஒரு கிலோ மல்லிகை 160- 200 ரூபாய், அரளி 80- 100 , செவ்வந்தி

160, வெள்ளை செவ்வந்தி 80-100, செண்டுமல்லி 20-40, பட்டுப்பூ 70-80, சம்பங்கி 250, கலர் ரோஜா 120, ஜாதி முல்லை 350 ரூபாய் என்ற நிலவரத்தில் விற்பனையாகின்றன. ஊட்டி ரோஜா 20 பூக்கள் கொண்ட கட்டு 40 ரூபாய்க்கும், தவனம் ஒரு கட்டு 20 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. பூ மொத்த வியாபாரிகள் கூறுகையில், 'மல்லிகை வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. இந்த மாதம் நம் பகுதியில் அதிக கோவில் திருவிழாக்கள் நடக்கும். அதனால் மாலை கட்டும் பூக்களின் விலை சற்று உயர்ந்துள்ளது. பட்டுப்பூ வரத்து மிகக்குறைவு மற்றும் தேவை அதிகம் என்ற காரணத்தால், சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்றது தற்போது 80 ரூபாய் வரை விற்பனையாகிறது,' என்றனர்.

## நெகமத்தில் கொப்பரை ஏலம்

**நெகமம்** : நெகமம் ஒழுங்குமுறை விற் பனைக்கூடத்தில், நேற்றுமுன் தினம் கொப்பரை ஏலம் நடந்தது. இதில், 51 கொப்பரை மூட்டைகள் ஏலம் விடப்பட்டன. முதல் தர கொப்பரை 43 மூட்டைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.74.65 முதல் ரூ.84.00க்கும், இரண்டாம்தரம் 8 மூட்டைகள் ரூ.55.05 முதல் ரூ.65.00 க்கும் ஏலம் போனது. இதில், 10 மூட்டைகளை விவசாயிகளும், நான்கு மூட்டைகளை வியாபாரிகளும் எடுத்துச்சென்றனர். கடந்த வாரத்தில், 63 கொப்பறை மூட்டைகள் ஏலம் விடப்பட்டன. இதில், முதல் தரம் கிலோ ஒன்றுக்கு ரூ.81.10 முதல் ரூ.87.00க்கும், இரண்டாம்தரம் ரூ.68.55 முதல் ரூ.75.65க்கும் ஏலம் போனது. இத்தகவலை விற்பனை கூட கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

## இருப்பு வைக்கப்படும் சின்ன வெங்காயம்

**பொங்கலூர்** : நான்கு மாதங்களுக்கு முன், சின்ன வெங்காயம் கிலோ 80 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டதால், வெங்காயம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். கடந்த கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட சின்ன வெங்காயம், தற்போது அறுவடைக்கு வந்துள்ளது. வறட்சி காரணமாக, உள்ளூர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், கர்நாடகா மாநிலத்தில் இருந்து சின்ன வெங்காயம் அதிகளவில் மார்க்கெட்டுக்கு வருகிறது. எனவே, வெளியூர்

வெங்காயம், கிலோ 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விலை சரிவை தடுக்க, விவசாயிகள், இருப்பு வைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். உள்ளூர் வெங்காயம் இருப்புக்கு தாங்கும் என்பதால், வியாபாரிகளும், வெங்காயத்தை இருப்பு வைப்பதற்காக கொள்முதல் செய்கின்றனர். எனவே, உள்ளூர் வெங்காயத்துக்கு வெளியூர் காய்களை விட சற்று கூடுதல் விலை கிடைக்கிறது. உள்ளூர் வெங்காயம் அதிகபட்சமாக கிலோ 18 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகள் கூறுகையில், "நாற்று விட்டு நடவு செய்யப் படும் ஹைபிரீட் ரகங்கள் நீண்ட நாட்கள் இருப்பு வைக்க இயலாது. சாதாரண வெங்காயம் அப்படி இல்லை. இரண்டு மாதங்களுக்கு கெட்டுப்போகாது. இவற்றுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது," என்றனர்.

### கோடையில் விற்பனைக்கு வரும் "ஒயிட் லகான்' கோழிகள் : குன்னூரில் விற்பனை

**குன்னூர்** : கோடை காலத்தில் விற்பனை செய்யப்படும் "ஒயிட் லகான்' கோழிகள் குன்னூரில் தற்போதே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.குன்னூரில் வழக்கத்திற்கு மாறாக இந்த ஆண்டு காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏப்ரல், மே மாதங்களில் நிலவும் வெயிலின் தாக்கம் தற்போதே குன்னூரில் துவங்கியுள்ளது. கடந்த வாரத்தில் லேசான மழை பெய்த போதும் போதுமானதாக இல்லை. தற்போதே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், பல இடங்களிலும் வறட்சி ஏற்பட்டு வருகிறது.ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசனின் போது நீலகிரிக்கு கொண்டுவரப்படும் "ஒயிட் லாகன்' என அழைக்கப்படும் கலர் கோழி குஞ்சுகள் விற்பனை குன்னூரில் தற்போதே கொண்டுவரப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சேலம் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள இந்த கோழி குஞ்சுகளுக்கு வண்ணங்கள் பூசி விற்பனை செய்யப்படுகிறது. இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தற்போது இவை ஒன்றிற்கு 10 ரூபாய் எனவும், 5 வாங்கினால் ஒன்று இலவசம் என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதுகுறித்து வியாபாரி சாந்தன் கூறுகையில்,""கேரளாவில் இந்த கோழிகள் நல்ல விற்பனையாகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் நீலகிரிக்கு வருகை தருவோம். ஆனால், தற்போது வெயில் அதிகமாக உள்ளதால்

தற்போதே விற்பனைக்காக கொண்டு வந்துள்ளோம்" என்றார்.வெயில் காலங்களில் இவற்றிற்கு எந்த பாதிப்பும் இருக்காது என்பதால் பொதுமக்கள் இவற்றை அதிகளவில் வாங்கி செல்கின்றனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**லாலாப்பேட்டை**: கிருஷ்ணராயபுரம் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட கிராமங்களில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. முகாமில், கள்ளப்பள்ளி, கருப்பத்தூர், சிந்தலவாடி, சிவாயம், வயலூர், பாப்பா காப்பட்டி, கொசூர், பஞ்சப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆடு, மாடுகள் உள்ளிட்ட, 500 மேற்பட்ட கால்நடைகளுக்கு இலவசமாக ஊசிகள் போடப்பட்டு, நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை வட்டார கால்நடை பராமரிப்பு துறை டாக்டர்கள் செய்திருந்தனர்.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

### விதையில்லா திராட்சை கிலோ 80க்கு விற்பனை



**கோவை:** விதையில்லா வெள்ளை திராட்சை வரத்து அதிகரித்துள்ளது. இதனால், சில்லரையில் ஒரு கிலோ ரூ.80க்கு விற்கப்படுகிறது. கோவை பழமார்க்கெட்டுக்கு மகாராஷ்டிராவில் இருந்து விதையில்லா வெள்ளை திராட்சையும், பெங்களூரில்

இருந்து ஜூஸ் திராட்சையும், தேனி, கம்பம், மாதம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பன்னீர் திராட்சையும் வருகின்றது. விதையில்லா வெள்ளை திராட்சைக்கு டிசம்பர் மாதம் முதல் ஏப்ரல் வரையில் சீசன் இருக்கும். இதனால் இந்த திராட்சைக்கு கடும் கிராக்கி இருக்கும்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் சீசன் துவங்கி தினமும் 7 டன் அளவு வரத்து இருந்தது. தற்போது, மகராஷ்டிராவில் வெள்ளை திராட்சையின் விளைச்சல் அமோகமாக உள்ளதால், தினமும் 15 முதல் 20 டன் வரை வரத்து உள்ளது. இதனால், விலை கிலோவுக்கு ரூ. 20 குறைந்துள்ளது. கடந்த மாதங்களில் 1 கிலோ ரூ.80 முதல் 100 ரூபாய் வரை விற்கப்பட்ட விதையில்லா வெள்ளை திராட்சை நேற்றைய நிலவரப்படி மொத்த விலையில் கிலோ ரூ.60க்கும் சில்லரை விலையில் ரூ.80க்கும் விற்கப்பட்டது. கருப்பு திராட்சை மொத்த விலையில் கிலோ ரூ.40க்கும், சில்லரை விலையில் ரூ.50க்கும் விற்கப்பட்டது. தற்போது ஆப்பிள், ஆரஞ்சு பழங்கள் வரத்து குறைந்துள்ளதாலும், வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளதாலும் விதையில்லா வெள்ளை திராட்சையின் விற்பனை அமோகமாக உள்ளது.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**சத்தியமங்கலம்,** :பவானிசாகர் பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. முடுக்கன்துறை, பெரியகள்ளிப்பட்டி, தயிர்பள்ளம் கால்நடை மருந்தகங்களுக்குட்பட்ட பகுதிகளில் 20 குழுக்களாக பிரிந்து கிராம பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி நேற்று போடப்பட்டது.

கோபி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி தலைமையில் நடைபெறும் இம்முகாம்கள் சத்தியமங்கலம், பவானிசாகர், தாளவாடி வட்டாரங்களில் தொடர்ந்து இம்மாதம் 21ம் தேதி வரை நடைபெறுமெனவும், கால்நடை வளர்ப்போர் இவ்வாய்ப்பை பயன்படுத்தி கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கால்நடை பராமரித்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**பூக்களின் வரத்து அதிகரிப்பு**

**கோவை,** : கோவை மலர்அங்காடிக்கு மல்லிகை பூ, முல்லை பூ, ஜாதி பூ போன்றவை புளியம்பட்டி, சத்தியமங்கலம், அன்னூர் ஆகிய பகுதிகளில் இருந்து வருகிறது. மேலும் அரளி பூ, சம்பங்கி பூ, கோழிகொண்டை, மருகு போன்றவை நிலக்கோட்டை, திண்டுக்கல், சேலம் போன்ற பகுதிகளில் இருந்து வருகிறது. இங்கு சாதாரண நாட்களில் 20 முதல் 30 டன் பூக்களும், விஷேச நாட்களில் 300 டன்கள் வரை பூ வரத்து இருக்கும். தற்போது பூக்களின் வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதனால் விலை கடந்த வாரங்களை காட்டிலும் வெகுவாக குறைந்துள்ளது. பூக்கள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டாலும் வியாபாரம் சுமாராகவே இருந்தது.

நேற்றைய நிலவரப்படி மல்லிகை ரூ.200, முல்லை ரூ.300, காக்கடை ரூ.120 செவ்வந்தி, ரூ.100, கனகாம்பரம் ரூ.400, கிலோ ரூ.100, சம்பங்கி ரூ.400, அரளி ரூ.40, லில்லிபூ ரூ.200, செண்டு மல்லி, மஞ்சள் செண்டு மல்லி ரூ.20 துளசி ரூ.30, தாமரை ரூ.5, சாதா ரோஸ் ரூ.50(1கட்டு), ஹைபிரிட்(ஊட்டி) ரூ.200 கோழிக் கொண்டை ரு.40,க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இந்த வாரம் முழுவதும் முகூர்த்த நாட்கள் இருப்பதால் மாலையின் விலை சற்று கூடியுள்ளது. முகூர்த்த மாலை ரூ.2,500 வரையும், ரோஸ் பெட்டல் மாலை ரூ.3000 வரையும் விற்பனையாகிறது.

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், கடந்த மாதங்களில் பனிப்பொழிவு அதிகமாக இருந்ததால் பூக்களின் வரத்து குறைந்து காணப்பட்டது. இதனால் விலையிலும் சற்று வேறுபாடு காணப்பட்டது. தற்போது பனிகாலம் முடிந்து வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் பூக்களின் வரத்து சற்று அதிகரித்துள்ளது. மேலும் இந்த வாரம் முழுவதும் முகூர்த்த நாட்கள் இருப்பதால் பூக்களின் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதனால் கடந்த நாட்களை விட தற்போது பூக்களின் விலை சரிந்துள்ளது. பூக்களின் விலையை போலவே விற்பனையும் சரிந்துள்ளது. தொடர்ந்து வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் வரும் ஏப்ரல் மாதங்களில் பூக்களின் விலையில் நிறைய மாற்றங்கள் இருக்கும் என்றார்.

**கோவை, திருப்பூரில் கொப்பரை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

**கோவை,** : கோவை, திருப்பூர், ஈரோட்டில் உற்பத்தியாகும் தேங்காய் கொப்பரை கிலோ 97க்கு விற்பனையாகிறது. விரைவில் இந்த விலை 100ஐ தொடும் நிலை ஏற்பட்டுள்ளது. வரலாறு காணாத இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் தேங்காய் உற்பத்தியில் கோவை, திருப்பூர், ஈரோடு முக்கிய மாவட்டங்களாக உள்ளது. இங்கு விளையும் தேங்காய் நேரடி விற்பனைக்கு போக, பாதிக்கு மேற்பட்ட அளவு கொப்பரையாக மாற்றப்படுகிறது. திருப்பூர்பகுதியில் காங்கயம், பல்லடம் பகுதியில் சுல்தான்பேட்டை, செஞ்சேரிமலை, பொள்ளாச்சி பகுதியில் பூச்சிபட்டி, நெகமம், உடுமலை பகுதியில் வாளவாடி, மொடக்குபட்டி, கப்பளாங்கரை, மற்றும் குடிமங்கலம் உள்பட 1,200க்கு மேற்பட்ட கொப்பரை உற்பத்தி செய்யும் களம் உள்ளது. இதில் உணவு பயன்பாட்டிற்கு பயன்படும் கொப்பரைகள், எண்ணெய் உற்பத்திக்கு பயன் படும் கொப்பரை என 2 வகை தயாரிக்கப்படுகிறது. உணவு பயன்பாட்டிற்கு பயன்படும் கொப்பரைகள் வட மாநிலங்களுக்கு விற்கப்படுகிறது. எண்ணெய் பயன்பாட்டிற்கு பயன்படும் கொப்பரை தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலுள்ள தேங்காய் எண்ணெய் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கோவை, திருப்பூர், ஈரோட்டில் உற்பத்தியாகும் கொப்பரையை வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்கின்றனர். தற்போது உணவுக்கு பயன்படும் கொப்பரை கிலோ 97க்கும், எண்ணெய்க்கு பயன்படும் கொப்பரை விலை கிலோ 92க்கும் வாங்கி செல்கின்றனர். கொப்பரை விலை விரைவில் 100ஐ தொடும் நிலை உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறுகையில், 'கடந்த இரண்டரை ஆண்டுக்கு முன்பு கொப்பரை விலை கிலோ ^30 முதல் ^40 வரை இருந்தது. கடந்த ஆண்டு 60 முதல் 70க்கும், இந்த ஆண்டு துவக்கம் முதல் 2 மாதத்தில் 70லிருந்து 97க்கு உயர்ந்துள்ளது. விலை உயர்விற்கு காரணம் தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை கடந்த 3 ஆண்டுகளாக பெய்யாததால் விளைச்சல் குறைந்ததுதான். இதனால் கடந்த இரண்டரை ஆண்டுகளாக தேங்காய் உற்பத்தி படிப்படியாக குறைந்து கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**சத்தியமங்கலம்**, :பவானிசாகர் பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. முடுக்கன்துறை, பெரியகள்ளிப்பட்டி, தயிர்பள்ளம் கால்நடை மருந்தகங்களுக்குட்பட்ட பகுதிகளில் 20 குழுக்களாக பிரிந்து கிராம பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி நேற்று போடப்பட்டது.

கோபி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி தலைமையில் நடைபெறும் இம்முகாம்கள் சத்தியமங்கலம், பவானிசாகர், தாளவாடி வட்டாரங்களில் தொடர்ந்து இம்மாதம் 21ம் தேதி வரை நடைபெறுமெனவும், கால்நடை வளர்ப்போர் இவ்வாய்ப்பை பயன்படுத்தி கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கால்நடை பராமரித்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**விராலிமலை அருகே வேளாண் பண்ணைக் கல்வி செயல் விளக்க பயிற்சி**

**இலுப்பூர்**,: விராலிமலை வட்டார வேளாண்மை துறை சார்பில் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் “நிலக்கடலை பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி ,நோய் நிர்வாகம் குறித்த பண்ணைக் கல்வி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விராலிமலை அருகே உள்ள மணமேட்டுப்பட்டியில் நடைபெற்ற இந்த பண்ணை கல்வி நிகழ்ச்சிக்கு விராலிமலை அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளரும், வேளாண்மை உதவி இயக்குனருமான கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். இந்த பண்ணை கல்வியில் நிலக்கடலை பயிரை தாக்கும் முக்கியமான பூச்சிகள் மற்றும் நோய்கள் பற்றியும், தாக்குதலின் அறிகுறிகள் பற்றியும், மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாக முறைகளை பயன்படுத்தி அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் வகுப்புடன் கூடிய செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு பயிற்சி குறிப்பேடு, துண்டு பிரசுரங்கள், சிறு தழைகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் இனக்கவர்ச்சி பொறி ஆகியன வழங்கப்பட்டன.இதற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் உமா

மகேஷ்வரி,சுப்பிரமணி, வட்டார தொழில் நுட்ப மேலாளர் லெட்சுமி பிரபா ஆகியோர் செய்திருந்தனர்.

**நிலத்தடி நீரை உயர்த்த ஆற்றில் 3 இடத்தில் தடுப்பணை பணி தீவிரம் கலெக்டர் ஆய்வு**

**வலங்கைமான்,** : வலங்கைமான் தாலுகாவில் நிலத்தடி நீரை உயர்த்த ஆற்றில் 3 இடங்களில் தடுப்பணை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இப்பணிகளை கலெக்டர் நடராஜன் நேரில் ஆய்வு செய்தார்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகாவில் நிலத்தடி நீரை உயர்த்தும் விதமாகவும், நீரின் உவர்ப்பு தன்மையினை குறைத்திடும் வகையிலும் ஆற்றுக்குள் தடுப்பணை கட்டப்படுகிறது. அதாவது ஆற்றின் மேற்பரப்பிலிருந்து குறிப்பிட்ட அளவு பள்ளம் தோண்டி, அதற்கென வடிவமைக்கப்பட்ட பிளாஸ் டிக் பாயினை விரித்து அதன் மீது மணல் மூட்டை களை அடுக்கி பிளாஸ்டிக் பாயினால் மூடப்பட்டு பின்னர் மேற்பரப்பில் மண் தள்ளப்படுகிறது. இப்பணிகள் ஆற்றின் மேல்பரப்பில் தெரியாத வகையில் கீழ்பரப்பிலேயே செய்யப்படுகிறது. இதனால் ஆற்றில் வேகமாக தண்ணீர் வரும் போது நீருக்குள் கட்டப்படும் தடுப்பணைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இப்படி கம்பி, சிமென்ட் இல்லாமல் அப்பகுதியிலேயே கிடைக்கும் எளிய பொருட்களை கொண்டு குறைந்த செலவில் நீருக்குள் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு வீராணத்தில் கட்டப்பட்ட நீருக்குள் தடுப்பணையால் அப்பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததை அடுத்து, தற்போது வலங்கைமான் தாலுகாவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடமுருட்டி ஆற்றில் இனாம்கிளியூரிலும், வெட்டாற்றில் சித்தன்வாழூர் மற்றும் சாரநத்தம் ஊராட்சியிலும் ஆற்றுக்குள் தடுப்பணைகள் அமைக்கும் பணி 3 இடங்களில் நடைபெற்று வருகிறது.

சித்தன்வாழூர் ஊராட்சி வெட்டாற்றில் 70 மீட்டர் நீளத்திற்கு ஆற்றின் குறுக்கு பகுதியில் 22 மீட்டர் அகலத்திற்கு, 3.3 மீட்டர் ஆழத்திற்கு இயந்திரத்தின் உதவியோடு பள்ளம் தோண்டும் பணியினையும், இப்பணிக்கென தயார் நிலையில் உள்ள ஒரு லட்சம் மணல் மூட்டைகளையும் திருவாரூர் கலெக்டர் நடராஜன்

நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணியினை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அப்போது தாசில்தார் வெங்கட்ராமன், ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம், ஒன்றிய ஆணையர்கள் பாலசுப்ரமணியன், தில்லை நடராஜன், ஒன்றிய பொறியாளர் ரவிச்சந்திரன், வருவாய் ஆய்வாளர் ராஜேஷ், ஊராட்சித் தலைவர் கனகசபை உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வேளாண் பயிற்சி முகாம் இளைஞர்களுக்கு அழைப்பு

**வேதாரண்யம்,** : வேளாண்மை பயிற்சி முகாமில் இளைஞர்கள் கலந்து கொள்ளலாம் என எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகமும், எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இளைஞர்களுக்கான வேளாண் வெற்றி வழிகாட்டு முறைகள் குறித்த பயிற்சி முகாகை வரும் 29, 30 தேதிகளில் கோவையில் நடத்த உள்ளது.

இந்த பயிற்சி முகாமில் இளைஞர்கள் பதிவு செய்து கட்டணமில்லாமல் கலந்து கொள்ளலாம். இப்பயிற்சியில் நாகப்பட்டினம், திருவாரூர் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொள்வதற்காக தங்களுடைய பெயரை மொபைல் போனில் 9962840682, 9840974748 பதிவு செய்து கொள்ளலாம்.

## கிராம மக்களுக்கு பயிர் காப்பீடு வழங்க வங்கி சம்மதம்

**முத்துப்பேட்டை,** : முத்துப்பேட்டை அருகே நடந்த அமைதி கூட்டத்தில் 5 கிராம மக்களுக்கு பயிர் காப்பீடு வழங்க வங்கி நிர்வாகம் சம்மதம் தெரிவித்தது. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அடுத்த இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தில்லைவிளாகம் கிளை மேலப்பெருமழை, கீழப்பெருமழை, குன்னலூர், வீரன்வயல் உட்பட 5 கிராமங் களை சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பயிர்க்காபப்பீடு தொகை யை வழங்காமல் காலதாமதப்படுத்தி வந்தது.

இந்நிலையில் 5 கிராம மக்கள் நேற்று முன்தினம் வங்கி முன்பு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று சமரச கூட்டம் ராமர் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட வேளாண் உதவி இயக்குனர்கள் மயில்வாகனம், நடேசன், திருத்துறைப் பூண்டி தனி தாசில்தார் காளேஷ்வரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் காமுராஜ், ஐஓபி வங்கி முதன்மை மேலாளர் ரவீந்திரன், கிளை மேலாளர் வைத்திலிங்கம், கூட்டுறவு சார்பதிவாளர் சவுந்தரராஜன், டிஎஸ்பி கணபதி, சப்இன்ஸ்பெக்டர் சாமி நாதன், கிராம கமிட்டி சார் பில் ஒன்றிய கவுன்சிலர் காமராஜ், காங்கிரஸ் பிரமுகர் தாஹிர், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்கள் சுப்பையன், யோகநாதன் உட்பட பலர் கலந்து கொண் டனர். இதில் அதிகாரிகளுக் கும், கிராம மக்களுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் வங்கி நிர்வாகிகள், 5 கிராம மக்களுக்கு வழங்க வேண்டிய பயிர் காப்பீடு தொகையை உடன் வழங்க சம்மதித்து கையெழுத்திட்டனர்.

**இறால் நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம்**

**வேதாரண்யம்**, : வேதாரண்யம் தாலுகா தோப்புத்துறையில் இறால் மற்றும் மீன் நோய்களுக்கான தேசிய கண்காணிப்புத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமுக்கு ரிஜிஜான் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் இறால் நோய்கள் பற்றியும், அதன் தடுப்பு மற்றும் வேளாண் மை முறைகள் பற்றியும் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிபுணர்கள் பிரின்ஸ் ஜெயசீலன், ரோசலிண்ட்ஜார்ஜ், கிரிசோலைட், உமா ஆகியோர் விளக்கினர். கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இறால் பண்ணை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

**மத்திய அரசின் கறவை மாடு வளர்ப்பு திட்டம்**

**நெல்லை,** : மத்திய அரசின் கறவை மாடு வளர்ப்பு திட்டம் குறித்த அறிக்கையை திட்ட ஆலோசகர் ஜகன்னாத்ராவ் தேசிகி வெளியிட்டார். புதுதில்லியில் மத்திய அரசின் திறன் வளர்க்கும் கழகம் சார்பில் கிராமப்புற

பெண்கள், மாணவ மாணவியர், வயதானவர்கள், இளைஞர்களுக்கு தனித் திறன் வளர்க்கும் பயிற்சி செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின் விளக்கத்தை ஜகன்னாத்ராவ் தேசிகி வெளியிட திருத்துறைப்பூண்டி மணிமாறன், வெங்காடம்பட்டி திருமாறன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இத்திட்டத்தில் கிராமப் புற மேம்பாட்டை எண்ணத்தில் கொண்டு 360 விதமான திறன் வளர்க்கும் பயிற்சிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன. இந்த திட்டத்தால் வேலையில்லா பட்டதாரிகள், வறுமையை வெல்ல நினைக்கும் முதியவர்கள், குடும்பத் தலைவியர், விதவையர் குடும்பங்கள் நலம் பெறும் என திருமாறன் தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆகஸ்டு – பிப்ரவரியில் 78 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி**



ஆகஸ்டு–பிப்ரவரி மாத காலத்தில் பருத்தி ஏற்றுமதி 5 சதவீதம் அதிகரித்து 78 லட்சம் பொதிகளாக உயர்ந்துள்ளது. எனினும் இனி வரும் மாதங்களில் சீனாவின் தேவையைப் பொறுத்தே இந்தியாவின் ஏற்றுமதி நிலவரம் இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது. முந்தைய பருவத்தின் இதே காலத்தில் நாட்டின் பருத்தி ஏற்றுமதி 74 லட்சம் பொதிகளாக இருந்தது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டதாகும்.

பருத்தி ஏற்றுமதி பொதுவாக டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் விறுவிறுப்பாக நடைபெறும். இந்த மாதங்களில் சீனா, வங்காளதேசம், வியட்நாம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பிரதானமாக பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போதைய நிலவரங்களின் அடிப்படையில், 2013 ஆகஸ்டு முதல் 2014 ஜூலை வரையிலான ஓர் ஆண்டு காலத்தில் நமது ஏற்றுமதி 1.02 கோடி பொதிகளை எட்டும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. முந்தைய ஆண்டில் 99 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**ஜனவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 5.9 சதவீதம் சரிவு**



**மும்பை,**

ஜனவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 5.9 சதவீதம் சரிவடைந்து 2.06 கோடி கிலோவாக குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி குறைந்ததே இதற்கு காரணம் என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில், ஜனவரி மாதத்தில் 1.15 கோடி கிலோ தேயிலை உற்பத்தியாகியுள்ளது. இது, 2013 ஜனவரியுடன் ஒப்பிடும்போது 15 சதவீதம் குறைவாகும். நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 56 சதவீதமாக உள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி பெரிதும் குறைந்ததால் ஒட்டுமொத்த அளவில் நாட்டின் தேயிலை உற்பத்தி சரிவடைந்துள்ளது. சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சி.டி.சி. ரக தேயிலை பிரதானமாக எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய

நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் தேயிலை நுகர்வு அதிகமாக உள்ளது. காபி நுகர்வு குறைவாக உள்ளதால் உற்பத்தியாகும் காபியில் 80 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது. தேயிலை உற்பத்தியில் அசாமும், காபி உற்பத்தியில் கர்நாடகாவும் முதலிடத்தில் இருந்து வருகின்றன.

**முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்பு பணிக்கு சென்ற தமிழக அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு; கேரள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை**




**குமுளி,**

முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்பு பணி மேற்கொள்ள சென்ற தமிழக அதிகாரிகளுக்கு கேரள போலீசார் அனுமதி மறுத்துள்ளனர். இதையடுத்து கேரள மாநில அதிகாரிகளுடன், தமிழக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தேனி, மதுரை, திண்டுக்கல் உள்பட 5 மாவட்டங்களின் பாசன நீர் ஆதாரமாக முல்லைப்பெரியாறு அணை அமைந்துள்ளது. கேரள மாநிலம் குமுளி அருகே அமைந்துள்ள இந்த அணையின் பராமரிப்பு பணியை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த அணை பலவீனம் அடைந்து விட்டதாக கேரள மாநில அரசு புகார்

தெரிவித்து அணை நீர்மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்த மறுப்பு தெரிவித்து வருவதால், தமிழகத்திற்கு போதிய அளவு தண்ணீர் கிடைப்பது இல்லை.

இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் அணை நீர்மட்டத்தை உயர்த்த தமிழக அரசு வழக்கு தொடர்ந்து தீர்ப்பு பெற்ற நிலையிலும், கேரள மாநில அரசு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. அதே நேரத்தில் அணையில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ.21 லட்சம் ஒதுக்கீடு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பராமரிப்பு பணி அணை நீர்மட்டம் குறைவாக உள்ள கோடைக்காலமான மார்ச் மாதம் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>ரூ.21 லட்சம் ஒதுக்கீடு</u>

இந்த ஆண்டு ரூ.21 லட்சம் நிதியில் அணையில் நீர்க்கசிவை அளவிடும் சுரங்கப்பாதையான கேலரி பகுதியில் டைல்ஸ் பதிக்கும் பணியை மேற்கொள்ள தமிழக அரசு திட்டமிட்டது. இதை அடுத்து இந்த பணியின் ஒரு பகுதியாக அணை காலரி பகுதிக்கு தளவாட பொருட்களை கொண்டு செல்ல கேரள மாநில அதிகாரிகள் ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் தமிழக அதிகாரிகளின் விளக்கத்தை தொடர்ந்து அணைப்பகுதிக்கு தளவாடப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன.

இதனிடையே இந்த டைல்ஸ் பதிக்கும் பணியை மேற்கொள்வது தொடர்பாக மதுரை மண்டல பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ராஜேஷ், முதன்மை பொறியாளர் தமிழரசு ஆகியோர் நேற்று முல்லைப்பெரியாறு அணைப்பகுதிக்கு சென்றனர்.

அங்கு அணை காலரி பகுதியில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள தமிழக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தபோது, அணைப்பாதுகாப்பு பணியில் இருந்த கேரள மாநில போலீசார் மறுப்பு தெரிவித்தனர். இதை அடுத்து பரபரப்பான சூழ்நிலை நிலவியது. இதனிடையே பராமரிப்பு பணி மேற்கொள்வது தொடர்பாக தகவல் கிடைத்ததும், கேரள மாநில அணைகள் பாதுகாப்பு குழுத்தலைவர்

பரமேஸ்வரன் நாயர் மற்றும் கேரள மாநில பொதுப்பணித்துறை அதிகாரிகள் வல்லக்கடவு வழியாக அணையின் காலரி பகுதிக்கு விரைந்து வந்தனர்.

<u>பேச்சுவார்த்தை</u>

பின்னர் தமிழக அரசு சார்பில் அணை பராமரிப்பு பணியை மேற்கொள்வது குறித்து அவர்கள் தமிழக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை விசுவரூபம் எடுத்த போது, அணையின் காலரி பகுதியில் நீர்க்கசிவு குறித்த ஆவணங்களையே கேரள மாநில அரசு பிரதானமாக எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில் அணை காலரி பகுதியில் பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதிப்பது குறித்து நேற்று இரவு வரை இருமாநில அரசு அதிகாரிகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

**கோழிப்பண்ணையாளர்களுக்கு கலப்படம் இல்லாத மருந்துகளை வினியோகம் செய்ய மருந்தகம் தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் தகவல்**



**நாமக்கல், -**

கோழிப்பண்ணையாளர் களுக்கு கலப்படம் இல்லாத மருந்துகளை வினியோகம் செய்ய இன்னும் 3 மாதங்களில் மருந்தகம் திறக்க உள்ளதாக தமிழ்நாடு முட்டைக் கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள் ளது.

## பதவி ஏற்பு விழா

நாமக்கல்லை சேர்ந்த முன் னணி கோழிப்பண்ணையா ளர்கள் தமிழ்நாடு முட்டைக் கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தி உள்ள னர். இதன் தலைமை அலுவல கம் நாமக்கல் – திருச்சி ரோட் டில் வாங்கிலி இன்டர்நேசனல் ஓட்டல் எதிரே உள்ள கட்டிடத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் தொடக்கவிழா நடைபெற்றது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் நாமக்கல் மண்டல தலைவர் டாக்டர் செல்வராஜ் குத்து விளக்கு ஏற்றி சம்மேளனத்தை தொடங்கி வைத்தார். பின்னர் சம்மேளன புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் நடந்தது. இதில் டாக்டர் செல்வராஜ், புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

## மே மாதம் வரை நீடிக்கும்

தற்போதைய விலை குறைப்பு ஆண்டுதோறும் ஏற்படுவது தான். இந்த நிலை மே மாதம் 2–வது வாரம் வரை நீடிக்கும். அதன்பிறகு 5, 6 மாதங்களுக்கு முட்டைக்கு நல்ல விலை கிடைக்கும். தற்போது நிர்ணயிக்கப்பட்டு உள்ள விலையால், ஹைதரா பாத்தில் இருந்து ஒரு முட்டை கூட இங்கு கொண்டு வர முடியாது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு முட்டை வியாபாரிகளுக்கு எதிரானது இல்லை. எனவே நாணயமான லாபம் பெற்றவர்கள் எங்க ளுக்கு ஆதரவு தந்து வருகிறார் கள். அதிக லாபம் சம்பாதித்த நபர்கள் எதிர்க்கிறார்கள். முட்டை விலையை காட்டிலும் நோய் தற்போது முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது. எனவே பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிப்பதில், சம்மேளனம் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வாறு டாக்டர் செல்வராஜ் பேசினார்.

முன்னதாக சம்மேளனத்தின் தலைவராக முத்துசாமி, உப தலைவராக வி.சுப்பிரமணியம், செயலாளராக ராஜேந்திரன், துணை செயலாளர்களாக ஆர்.சுப்பிரமணியம், ஆறு முகம், பொருளாளராக சரவணக்குமார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்று கொண்ட னர்.

## 3 மாதத்தில் மருந்தகம்

பின்னர் சம்மேளனத்தின் தலைவர் முத்துசாமி கூறிய தாவது:–

கடந்த ஆண்டு முட்டை விலை நிர்ணயத்தில் 60 பைசா வரை மைனஸ் இருந்தது. இதனால் பண்ணையாளர் களுக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டது. இதனை தடுக்கும் வகையில் ஜனவரி 1–ந் தேதி முதல் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலைக்கே முட்டை களை விற்பனை செய்து வருகிறோம்.

ஆந்திராவைபோல தமிழகத் திலும் கோழிப்பண்ணை தொழிலை விவசாயம் சார்ந்த தொழிலாக மாற்ற மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்த உள்ளோம். கோழிப்பண்ணை களுக்கு சலுகை விலையில் மின்சாரம் கிடைக்க நட வடிக்கை எடுப்போம். கலப் பினம் இல்லாத மருந்துகளை நேரடியாக மருந்து கம்பெனி களிடம் இருந்து வாங்கி, பண் ணையாளர்களுக்கு வழங்க, சம்மேளனத்தின் சார்பில் இன்னும் 3 மாதங்களில் மருந்தகம் திறக்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் முட்டை வியாபாரிகள் சங்க தலைவர் ஆனந்தன் மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**கோபியில் வரத்து அதிகரித்ததால் தர்பூசணி விலை குறைந்தது ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை**



**கோபிசெட்டிபாளையம்,**

கோபியில் தர்பூசணி வரத்து அதிகரித்ததால் விலை குறைந்து ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**சுட்டெரிக்கும் வெயில்**

தமிழ்நாட்டில் கோடை வெயில் சுட்டெரிக்க தொடங்கிவிட்டது. கோடை காலம் தொடக்கத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியில் வரமுடியாத நிலை உள்ளது. பெண்கள் சாலையில் நடந்துசெல்லும்போது குடையை பிடித்துக்கொண்டும், இருசக்கர வாகனங்களில் செல்லும்போது துணியால் தலையில் போர்த்தி கொண்டும் செல்கிறார்கள்.

கோடை வெயிலை சமாளிக்கவும், தாகத்தை தீர்க்கவும் பொதுமக்கள் குளிர்பானங்கள், இளநீர், தர்பூசணி, நுங்கு, பதனீர் போன்றவற்றை வாங்கி விரும்பி சாப்பிடுகிறார்கள்.

**தற்காலிக கடைகள்**

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டைபோல் இந்த ஆண்டும் வெயில் சுட்டெரிக்க தொடங்கியுள்ளது. கோபிசெட்டிபாளையம் பகுதியில் தர்பூசணி, இளநீர் விற்பனை செய்யப்படும் தற்காலிக கடைகள் ஆங்காங்கே சாலையோரம் முளைத்து உள்ளன. சாலையோரங்களில் தர்பூசணி குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அந்த வழியாக வாகனங்களில் செல்பவர்கள் தாகம் தீர்க்க இளநீர், கம்பங்கூழ், தர்பூசணி, பதனீர், நுங்கு போன்றவற்றை சாப்பிட்டுவிட்டு செல்கிறார்கள்.

**விலை குறைவு**

கோபி பகுதியில் தர்பூசணி வரத்து அதிகரித்ததை தொடர்ந்து விலை குறைந்து உள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு தர்பூசணி ஒரு கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது வரத்து அதிகரித்ததை தொடர்ந்து ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறும்போது, “வெயில் அதிகமாக அடிப்பதால் ஏராளமானவர்கள் தர்பூசணியை விரும்பி சாப்பிடுகிறார்கள். திண்டிவனம் மற்றும்

அதன் சுற்றுவட்டார பகுதியில் இருந்து தர்பூசணி விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட தர்பூசணி, இந்த வாரம் ஒரு கிலோ ரூ.15–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் ஒரு சில வாரங்களில் தர்பூசணியின் விலை உயர வாய்ப்பு உள்ளது.“ என்றார்.

**வால்பாறையில் வனத்துறை ஊழியர்களுக்கு பயிற்சி**



ரொட்டிக்கடை வனத்துறை உதவி மையத்தில் வனவிலங்குகளுக்கு மயக்க மருந்து செலுத்துவது குறித்து வனச்சரக அலுவலர்கள் பயிற்சியளித்த போது எடுத்த படம்.

வால்பாறையில் வனத் துறை ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட் டது.

<u>பயிற்சி முகாம்</u>

வால்பாறையில் அட்ட கட்டி, ரொட்டிக்கடை பகுதி யில் உள்ள ஆனைமலை புலிகள் காப்பக வனத்துறை பயிற்சி மையத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து வனக் கோட் டங்களை சேர்ந்த வனச்சரக அலுவலர்கள், வனவர்கள், வனக்காவலர்கள் ஆகியோ ருக்கு தனித்திறமை வளர்த்தல் பயிற்சி முகாம் நடை பெற் றது.

பயிற்சியில் மனித-வன விலங்கு மோதலை தடுத்தல், அட்டகாசம் செய்யும் வன விலங்குகளை மயக்க மருந்து கொடுத்து பிடித்தல். காடு களில் விலங்குகளின் நட மாட்டத்தை கண்காணிக்க தானியங்கி காமிராக்களை வைப்பது,வனவிலங்குகளின் நடமாட்டத்தை பொது மக் களுக்கு அறிவிக்கும் அலாரம் அமைப்பது,

<u>காட்டுத்தீ</u>

வனவிலங்குகள் சாலை களில் செல்லும் வாகனங்களில் அடிபட்டு இறப்பதை தடுக்க நடவடிக்கை எடுப்பது, கோடை காலத்தில் காட்டுத்தீ ஏற்படுவதை தடுக்க தீத்தடுப்பு கோடுகள் அமைப்பது. புலிகள் காப்பக பகுதிகளில் மேற்கொள்ளவேண்டிய நடை முறைகள், வனப்பகுதிகளை பராமரிப்பது என்பது உள்பட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப் பட்டன.

பயிற்சியை ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குனர் ராஜீவ் கே.ஸ்ரீவஸ்தவா தொடங்கி வைத்தார். தொடர்ந்து அமராவதி வனச் சரக அலுவலர் தங்கராஜ் பன்னீர்செல்வம், வால்பாறை வனச்சரக அலுவலர் கிருஷ்ண சாமி, மானாம்பள்ளி வனச் சரக அலுவலர் அறிவொளி, வனவர் முனியாண்டி,இயற்கை ஆர்வலர்கள் ஆறுமுகம், ஜெகநாதன், கணேஷ் ரகுராம் ஆகியோர் பயிற்சி அளித் தனர். 3 நாட்கள் நடைபெற்ற பயிற்சி முகாமில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 130 வனத்துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூருக்கு 1,110டன் நெல்மூட்டைகள் அரவைக்கு கொண்டு செல்லப்பட்டன



தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு அரவைக்காக அனுப்ப நெல் மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு இருந்த காட்சி

**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்துசரக்கு ரெயில் மூலம் திருவள்ளூருக்கு 1,110 டன் நெல் மூட்டைகள் அரவைக்கு கொண்டு செல்லப்பட்டன.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும்.

இவ்வாறு இருப்பு வைக்கப்படும் நெல் மூட்டைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், தஞ்சையில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு அனுப்பி வைக்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் சென்னை, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, திருநெல்வேலி உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

<u>1,110 டன்</u>

இதே போல் நேற்று தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு சரக்கு ரெயில் மூலம் 1,110 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன. இதற்காக நெல் மூட்டைகள் சேமிப்புக்கிடங்கு மற்றும் கொள்முதல் நிலையங்களில் இருந்து 105 லாரிகளில் கொண்டுவரப்பட்டு 29 ரெயில் பெட்டிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.